**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 18 நாள் புதன்கிழமை

**இ.ம.எண்.5/2026 அதன் அ.வ.எண்.150/2024**

1) கணேசன்
2) தங்கபாண்டி
3) மகாராஜன் ... மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

–எதிர்–

பாலமுருகன் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என்முன்பாக 18.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.R.சங்கர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.செல்வம் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18 விதி 17 151– ன் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கின் பிரதிவாதிகள் என்றும், அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு கூடுதல்

சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.2 ஆக முருகன் என்பவரை 26.10.2016 தேதியிட்ட உயில் சம்மந்தமாக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றும், அவரிடம் தங்கம்மாள் எழுதிக் கொடுத்த வேறு சில ஆவணங்கள் சம்மந்தமாக அவர் சாட்சியாக கையெழுத்திட்டது குறித்து முக்கியமான கேள்விகள் கேட்க விடுபட்டு விட்டது என்றும், மேற்படி கேள்விகள் இவ்வழக்கை சரியான முறையில் முடிவு செய்வதற்கு அவசியமான ஒன்று என்றும், எனவே, பி.வா.சா.2 முருகன் என்பவரை கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்ய மீண்டும் அழைத்து விசாரணை செய்ய உத்தரவிட வேண்டியது அவசியம் எனக் கூறி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) எதிருரை சுருக்கம்**

மனுதாரர்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரர் பி.வா.சா.2 ஐ எதற்காக ரீ கால் செய்ய வேண்டும் என்கிற எந்தவொரு விபரமும் மனுவில் சொல்லப்படவில்லை என்றும், மனுதாரர்கள், மனுவில் வேறு சில ஆவணங்களில் பி.வா.சா.2 சாட்சியாக கையொப்பம் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்கள் என்றும், ஆனால் மேற்படி ஆவணங்கள் குறித்த விபரம் எதுவும் அபிடவிட்டில் சொல்லப்படவில்லை என்றும், பி.வா.சா.2 ஐ எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததில், மனுதாரர்கள் தரப்பு வழக்கிற்கு ஏற்பட்ட பாதகத்தை சரி செய்வதற்காக இந்த மனுவினை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மனுதாரர்கள் பிரதான வழக்கை இழுத்தடிக்கவே இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

4) <u>**இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், இம்மனு அனுமதிப்பதற்கு உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.**</u>

5) இந்த மனுவை பொறுத்தவரை இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியத்தையும் மற்றும் சான்றாவணத்தையும் முன்னிறுத்தவில்லை.

6) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கின் பிரதிவாதிகள் ஆவார்கள். இம்மனுவின் எதிர்மனுதாரர் அசல் வழக்கின் வாதி ஆவார். அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள போது இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) அசல் வழக்கில் பி.வா.சா.2 ன் முதல் விசாரணை கடந்த 16.02.2026 ம் தேதி முடிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கேட்டுக் கொண்டதற்கு இணங்க 18.02.2026 ம் தேதி குறுக்கு விசாரணைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. கடந்த 18.02.2026 ம் தேதி பி.வா.சா.2 நீதிமன்றத்தில் ஆஜரான போது, அவரை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய தயாராக இல்லாததால் மீண்டும் பி.வா.சா.2 ன் குறுக்கு விசாரணைக்காக 20.02.2026 ம் தேதி ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. அன்றைய தினம் பி.வா.சா.2 ஐ வாதி தரப்பில் முழுமையாக குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டது. அதன் பின்னர், 23.02.2026, 26.02.2026, 03.03.2026, 05.03.2026 ஆகிய தேதிகளில் இந்த வழக்கு விசாரணைக்காக வந்தது. பின்னர், எதிர்மனுதாரர் மனு தாக்கல் செய்து பி.வா.சா.3 ஐ கடந்த 05.03.2026 ம் தேதி மீண்டும் கூடுதல் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். இந்த சூழ்நிலையில், 17.03.2026 ம் தேதி இம்மனுவை மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில், மனுதாரர்கள் தரப்பில் பி.வா.சா.2 ஐ மேலும் தங்கம்மாள் கையெழுத்திட்ட ஆவணங்களில் உள்ள கையெழுத்து சம்மந்தமாக பி.வா.சா.2 ஐ மேற்படி சங்கதியைப் பொறுத்து கூடுதல் முதல் விசாரணை செய்ய இருப்பதால் இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென கோரப்பட்டதை கருத்தில் கொண்டு பி.வா.சா.2 ஐ கூடுதல் முதல் விசாரணை செய்ய அனுமதித்தால் இவ்வழக்கினை சரியாக தீர்வு காண்பதற்கு வாய்ப்பு இருந்தாலும், இருக்கலாம் என்பதாலும், நீதியின் நலன் கருதியும், இம்மனுவானது நிபந்தனையுடன் அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக, இம்மனுவின் செலவு தொகையாக ரூ.1000/-ஐ மனுதாரர்கள், எதிர்மனுதாரருக்கு 23.03.2026 ம் தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இந்த மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடி ஆகிவிடும் எனவும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 23.03.2026.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 18 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY
Orders uploded on 18.03.2026.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.03.18 16:19:59 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

இரு தரப்பிலும் சாட்சி, சான்றாவணங்கள் - இல்லை

MARIMUTHU R MUNIYASAMY
Orders uploded on 18.03.2026.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.03.18 16:20:06 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**<u>இ.ம.எண்.5/2026 இன்</u>**
**<u>அ.வ.எண்.150/2024</u>**

சீரான/ வரைவு – உத்தரவு

**<u>18.03.2026</u>**